நூல்-அஞ்சல்

உ

சிவமயம்

சிவகங்கை மாவட்டம், புதுவயல் பேரூராட்சி,

ஸ்ரீ சரசுவதி சங்கக் கட்டிட வளாகத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும்

அருள்மிகு விநாயகர், அருள்மிகு கலைமகள் திருக்கோயில்

# நூதன ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக அழைப்பிதழ்



நாள் :
**31.08.2020**
திங்கட்கிழமை

பெறுநர்.

உயர்திரு. ______________________

அவர்கள்

______________________

______________________

______________________

PIN

இங்ஙனம்,
ஸ்ரீ சரசுவதி சங்கம்,
இரு கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தார்
மற்றும் சித.அரு.வீர.அரு.குடும்பத்தார்.

உ
சிவமயம்
அருள்மிகு கலைமகள் துணை







# நூதன ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக அழைப்பிதழ்

**விநாயகர் துதி**

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

**கலைமகள் துதி**

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் எம் அம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள், என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள், இங்கு வாராது இடர்.

பேரன்புடையீர்,

எல்லாம் வல்ல அருள்மிகு கைலாச விநாயகர், அருள்மிகு உமையாம்பிகை உடனாகிய வீரசேகரர் திருவருளால், பொன்னும் கலையும் பொதுநலமும், பொங்கிப் பொலியும் புதுவயல் நகரில் **22-7-1922** தொடங்கப் பெற்ற நூற்றாண்டு விழாக்காண இருக்கும் ஸ்ரீ சரசுவதி சங்கம் நடத்தி வரும் ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலைப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் முகப்பில், சங்கத்தின் முன்னாள் தலைவர், **புதுவயல் சித.அரு.வீரப்பச் செட்டியார்** அவர்களின் நினைவு அறக்கொடையாக, அன்னாரின் **சித.அரு.வீர.அரு.குடும்பத்தாரால்** கட்டி அளிக்கப் பெற்ற **அருள்மிகு விநாயகர், அருள்மிகு அன்னை கலைமகளின் நூதன ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்,** நிகழும் மங்களகரமான சார்வரி ஆண்டு, ஆவணித் திங்கள் 15-ஆம் நாள் 31-8-2020 திங்கட்கிழமை, சுக்கில பட்சம், சதுர்த்தசி திதி, திருவோணம் நட்சத்திரமும், அமிர்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை **9.00** மணிக்கு மேல் **10.30** மணிக்குள், துலா லக்கினம் ஜெய வேளையில் நடைபெற உள்ளது. அவ்விழாவிற்கு ஆன்மீக அன்பர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

புதுவயல்
**2-7-2020**

இப்படிக்கு,
**ஸ்ரீ சரசுவதி சங்கத்தார்,**
**இரு கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தார்**
**மற்றும் சித.அரு.வீர.அரு.குடும்பத்தார்.**

## நிகழ்ச்சி நிரல்

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நேரம் | நிகழ்ச்சி விபரம் |
|---|---|---|---|
| ஆவணி 14ம் நாள் | **30.8.2020** ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | அனுக்ஞை கணபதி ஹோமம் நவக்கிரஹ ஹோமம் |
| | | மாலை 4.00 மணி முதல் | அனுக்கை, விக்னேசுவர பூஜை, எஜமானர் சங்கல்பம், புண்யாக வாசனம், வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரஹணம், அங்கிரார்ப்பணம், ரக்ஷா பந்தனம், கும்ப அலங்காரம், யாகசாலை, முதற்கால யாகவேள்வி, வேதிகா அர்ச்சனை, வேத பாராயணம், யாக வேள்வி, |
| | | இரவு 8.30 மணி | பூரணாஹுதி, தீபாராதனை பிரசாதம் வழங்குதல். |
| ஆவணி 15ம் நாள் | **31.8.2020** திங்கட்கிழமை | காலை 6.30 மணி | கோமாதா பூஜை, இரண்டாம் கால யாகசாலை வேள்வி ஆரம்பம் பிம்பசுத்தி, ரக்ஷா பந்தனம், வேள்வி அர்ச்சனை, வேத பாராயணம், யாக வேள்வி |
| | | காலை 9.00 மணி | பரிஸ்ஷாஹுதி, நாடி சந்தானம் |
| | | காலை 9.30 மணி | மஹா பூரணாஹுதி, தீபாராதனை. |
| | | காலை 9.45 மணி | யாத்ரா தானம், கடம் புறப்பாடு |
| | | காலை 10.00 மணி | மஹா கும்பாபிஷேகம், மஹா அபிஷேகம், பட்டு சாத்துதல், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |

சர்வசாதகம் : பிரம்மஸ்ரீ நாகராஜாமணி ஐயர், ஜெயங்கொண்டான்,
யாகசாலை அமைப்பு : ஆர்.பிரபு மித்திராவயல்
ஆலய ஸ்தபதி : அ.பழனிச்சாமி, திருமயம்.
நாதஸ்வரம் : சாக்கோட்டை ஸ்ரீ வீரசேகர் உமையாம்பிகை திருக்கோவில் ஆஸ்தான வித்வான் K.G.பெருமாள் குழுவினர்